# 17 03 2015 முதல் கால வறையற்ற வேலை நிறுத்தம்

17.3.2015 முதல் அனைத்து ஊழியர்களும், அதிகாரிகளும் காலவரையற்ற வேலைநிறுத்தத்தை மேற்கொள்ள வேண்டும் என்று BSNL- இன் அனைத்து சங்க கூட்டமைப்பு எழுச்சி மிகு அறைகூவலை விடுத்துள்ளது.இது ஊழியர்களைப் பொறுத்த மட்டில் வாழ்வா - சாவா என்ற சூழ்நிலை.

**கேள்விக்குறியாகும் எதிர்காலம் ?**

BSNL நிறுவனம் கடந்த சில ஆண்டுகளாக நஷ்டத்தில் இயங்கி வருகிறது. தொலைதொடர்பு சந்தையில் BSNL நிறுவனத்தின் பங்கு குறைந்து கொண்டே செல்கிறது. அது தற்போது 10%- க்கும் கீழே விட்டது. ஊழியர்களுக்கு 1.1.2017 முதல் செய்யப் பட வேண்டிய அடுத்த சம்பள மாற்றம் மிகப் பெரிய கேள்விக்குறியாக மாறியுள்ளது. அது மட்டுமன்றி, BSNL ஓய்வூதியர்களுக்கு, பென்ஷன் மாற்றமும் ஒரு நிச்சயமற்ற நிலையில் உள்ளது.சுருக்கமாகச் சொல்வதென்றால், BSNL நிறுவனம், இரண்டரை லட்சம் அதிகாரிகள்-ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியர்கள் ஆகியோரின் எதிர்காலம் இருள் சூழ்ந்ததாக உள்ளது.

**திட்டமிட்ட அவதூறு**

மறுபுறம் BSNL நிறுவனத்தின் ஊழியர்களை அவதூறு செய்யும் முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.ஊழியர்களின் மோசமான வேலைத் தன்மையின் காரணமாகத்தான் BSNL நிறுவனம் தனியார் நிறுவனங்களோடு போட்டி போட முடியவில்லை என்று குற்றம் சாட்டப் படுகிறது.மேலும், BSNL நிறுவனத்தின் வருமானத்தில் 52% பகுதி, ஊழியர்களின் ஊதியத்துக்காக வழங்கப் படும் மிகப் பெரிய செலவினமாக உள்ளதே நிறுவனத்தின் நிதி நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது என்றும் பிரச்சாரம் செய்யப் படுகிறது. BSNL நிறுவனத்தின் வீழ்ச்சிக்கான உண்மையான காரணங்களை மூடி மறைக்க தெளிவான முயற்சி மேற்கொள்ளப் படுகிறது.

**உண்மையான காரணம் என்ன ?**

BSNL நிறுவனத்தின் கட்டமைப்புகளை விரிவுபடுத்தாததால் கடந்த பல ஆண்டுகளாக BSNL நிறுவனத்தின் சேவைகளின் தரம் படிப்படியாக கீழிறங்கி உள்ளது.2007- ஆம் ஆண்டு 45 மில்லியன் இணைப்புகளுக்கான டெண்டரையும், 2010- ஆம் ஆண்டு 93 மில்லியன் இணைப்புகளுக்கான டெண்டரையும் ரத்து செய்தது BSNL நிறுவனத்தைக் கடுமையாக பாதித்தது. இந்த டெண்டர்கள் ரத்து செய்யப் பட்டதால், 5-6 ஆண்டுகளுக்கு BSNL நிறுவனத்திற்கு BSNL GSM கருவிகள் கிடைக்கவில்லை இது, வலைக் கட்டமைப்பு நெருக்கடியை உருவாக்கி சேவைகளின் தரத்தில் வீழ்ச்சியை ஏற்படுத்தியது. இன்றைய தினம் தனியார் நிறுவனங்களான ஏர்டெல் மற்றும் வோடபோன் நிறுவனங்கள் ஒவ்வொன்றும் சுமார் 1,20,000 டவர்களை வைத்திருக்க, BSNL நிறுவனம் சுமார் 60,000 டவர்களை மட்டுமே வைத்துள்ளது. இந்நிலையில், BSNL நிறுவனம் எவ்வாறு இந்த தனியார் நிறுவனங்களோடு போட்டி போட முடியும்? எனவே, மத்தியில் தொடர்ந்து அதிகாரத்துக்கு வந்த அரசாங்கங்களின் பொதுத் துறை விரோத - தனியார் ஆதரவு கொள்கைகளே நிறுவனத்தின் தற்போதைய நெருக்கடிக்குப் பொறுப்பு என்பதில் சந்தேகமில்லை. BSNL நிறுவனத்தை பலவீனப் படுத்த ஒவ்வொரு நடவடிக்கையையும் அவர்கள் எடுத்துள்ளனர். BSNL நிறுவனத்திற்கு கருவிகள் வாங்குவதற்கு தடைகளை உருவாக்கியது போலவே ADC கட்டணத்தை நிறுத்தியது, கிராமப் புறங்களில் அடிப்படை தொலைபேசி சேவையை வழங்குவதால் ஏற்படும் நஷ்டத்திற்கான ஈட்டுப் பணத்தை அளிக்க மறுப்பது, BWA அலைக்கற்றை கட்டணத்தைத் திருப்பித் தர மறுப்பது போன்றவை சில முக்கியமான எடுத்துக் காட்டுகளாகும். BSNL நிறுவனத்திற்கு விரோதமான கொள்கைகளை அரசாங்கம் மாற்றிக் கொள்ள வேண்டும்.

**நிதி அவசரத்தேவை**

மிக விரைவான விரிவாக்கமும், மொபைல் கட்டமைப்பை மேம்படுத்துவதும் BSNL நிறுவனத்தைப் புத்தாக்கம் செய்வதற்கான உடனடி தேவைகளாகும் மிகப் பெரிய மூலதனம் இல்லாமல் இது சாத்தியமல்ல. இம்மூலதனத்திற்கு BSNL நிறுவனத்திடம் நிதி வசதி இல்லை. BSNL நிறுவனம் கடந்த பல ஆண்டுகளாக நஷ்டத்தில் உள்ளது என்றும், கடனைத் திருப்பிச் செலுத்த இயலாது என்றும் கூறி, பொதுத் துறை வங்கிகள் கூட BSNL நிறுவனத்திற்கு கடன்

வழங்க மறுத்து வருகின்றன. மூலதனதனத்திற்கான தொகையை, வங்கிகள் BSNL நிறுவனத்திற்கு கடனாக வழங்குவதை மத்திய அரசாங்கம் தலையிட்டு உறுதி செய்ய வேண்டும்.

வெறும் பேச்சு வேண்டாம்

மத்திய தகவல் தொடர்பு அமைச்சராகப் பதவியேற்றவுடன், திரு. ரவிசங்கர் பிரசாத் BSNL புத்தாக்கத்திற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வதாக உரத்த குரலில் உறுதி அளித்தார். ஆனால், அந்த திசைவழியில் எந்த நடவடிக்கையும் இன்று வரை எடுக்கப் படவில்லை. ஆனால் அதற்கு பதிலாக BSNL - MTNL நிறுவனங்களை இணைக்க அரசாங்கம் வேகமான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இந்த இணைப்பு நடைபெறுமானால் BSNL நிறுவனத்தின் முடிவாக மாறி விடும் அது போலவே, மத்திய அரசாங்கம் பிராட்பேண்ட் நிறுவனத்தை உருவாக்கியுள்ளது; தனியான துணை டவர் நிறுவனத்தை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளையும் துவக்கியுள்ளது. இந்த நடவடிக்கைகள் BSNL நிறுவனத்தை மேலும் பலவீனப் படுத்தும் நோக்கத்தைக் கொண்டுள்ளன என்பதில் சந்தேகமில்லை. டெலாய்ட்டி கமிட்டியின் நாசகர பரிந்துரைகள் அமுல்படுத்தப் படுமானால், சரி செய்ய முடியாத அளவுக்கு BSNL நிறுவனத்திற்கு பாதிப்பை உண்டாக்கும்.

வேறு வழியில்லை

BSNL நிறுவனத்தைப் புத்தாக்கம் செய்வது குறித்து அனைத்து சங்கங்களின் கூட்டமைப்பு அரசாங்கத்திற்கு மனுவுக்கு மேல் மனுவாக அளித்துள்ளது. ஆனால் இந்த ஆலோசனைகளுக்கு கேளாக் காதினராகவே அரசாங்கம் இருந்து வருவது துரதிருஷ்டமானது. BSNL - MTNL நிறுவனங்களை இணைப்பது குறித்து அவ்வப்போது குரல் எழுப்புகிறதே தவிர, BSNL நிறுவனத்தைப் புத்தாக்கம் செய்வதை அரசாங்கம் உண்மையில் விரும்பவில்லை என்பது இப்போது தெள்ளத் தெளிவாக தெரிகிறது. எனவே, போராட்டத்தை மேற்கொள்வதைத் தவிர நமக்கு வேறு வழியில்லை.

இந்த வேலை நிறுத்தத்தை ஒரு வரலாற்று வெற்றியாக்குவதற்கு அனைத்து ஊழியர்களையும் அணி திரட்டுவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு அனைத்து மாநிலச் சங்கங்களையும், மாவட்டச் சங்கங்களையும் மத்திய சங்கம் அறைகூவி அழைக்கிறது !